<u>கொடைக்கானல் நகராட்சி</u>

**2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் நாள் (30.11.2020) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.**

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

**1)** கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான செண்ட் மேரிஸ் சாலையில் அமைந்துள்ள ஆணையர் குடியிருப்பினை சுற்றியுள்ள இடங்கள் காலியாக உள்ளது. இந்த இடங்களை ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாப்பதற்கு தடுப்பு சுவர் அமைத்து பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படுகிறது.

1. 11/2x1/4 Angle — 61 Nos.
2. PVC Garden Mesh — 4810 Sqft
3. Kattukambi — 2 kg
4. Kadaparai — 2 Nos
5. Spade — 2 Nos.

மேற்கண்ட உபகரணங்களை உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று வாங்கிக் கொள்ளவும், இந்த பொருட்களை கொண்டு இந்நகராட்சி சாலை பணியாளர்கள் மூலம் சுற்றுப்புற வேலி அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்சே செலவு தொகை ரூ. 1.10 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **921, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான (ODF+) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சியில் 1 முதல் 24 வரை உள்ள வார்டுகள் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதிகளாக (ODF+) அறிவித்து பொது மக்களிடம் இது தொடர்பாக ஆட்சேபணை கோர நாளிதழ் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினம் ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) தூய்மை இந்தியா திட்டப் பணிகள் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1286/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **922, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நகர்புற வளர்ச்சி துறையினர் (MOUD) நட்சத்திர அந்தஸ்து (Star Rating) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக கொடைக்கானல் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் Secondary Storage and Transpiration செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, கொடைக்கானல் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் சான்றிதழுக்கு (Self declaration) விண்ணப்பிக்க பொது மக்களிடம் ஆட்சேபனை கோருவதற்கு நாளிதழில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) தூய்மை இந்தியா திட்டப் பணிகள் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1286/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **923, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையக் கட்டணக் கழிப்பறை வசூல் செய்யும் குத்தகைதாரர் திரு.எஸ்.சொக்கலிங்கம் மற்றும் புரூட்டன் வளாக கட்டண கழிப்பறை வசூல் செய்யும் குத்தகைதாரர் திரு.வி.சரவணக்குமார் என்பவர்கள் குத்தகை சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.லூர்து பால் மவுரியா அவர்கள் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை முடித்தமைக்காக வழக்கு எண்.W.P(MD)No.13564/2020ற்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/– (ம) W.P.(MD)13558/2020 ற்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/– ஆக மொத்தம் ரூ.30,000/– வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட தொகையை இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.லூர்து பால் மவுரியா அவர்களுக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6736/2016/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **924, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் அனுமதியற்ற /அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள், ஆக்கிரமிப்புகள் மற்றும் நில வகைபாடு மாற்றம் தொடர்பான கீழ்க்கண்ட வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வழக்குகளை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களால் நகராட்சி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்வழக்குகளுக்கு வழக்கு கட்டணமாக ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.7500/–வீதம் மூன்று வழக்குகளுக்கு தொகை ரூ.22,500/– வழஙககோரி 6.11.2020ம் தேதி பட்டியல் சமர்பித்துள்ளார். இவ்வழக்குகளுக்கான கட்டணத்தை நகராட்சி நிலை வழக்கறிஞருக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வழக்கு எண். | பெயர் |
|---|---|---|
| 1 | WP(MD)No.15276 of 2020 | சொக்கப்பன் |
| 2 | WP(MD)No.15418 of 2020 | எஸ்.சி.சேகர் |
| 3 | WP(MD)No.15532 of 2020 | ஜி.ரமேஷ் |

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (ந.க.எண்.420/2004/எப்1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **925, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) வடகிழக்கு பருவமழை 2020 யை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான கீழ்க்கண்ட தளவாடப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் இயற்கை பேரிடர் மேலாண்மை பணியின் அவசர அவசியம் வாங்கிட வேண்டியுள்ளது.

1. Crow Bar - 10 Nos
2. Spade - 10 Nos
3. Axe - 5 Nos
4. Nylon Rope 16mm Roll 50m - 4 Nos
5. POT - 10 Nos
6. Tourch Light - 10 Nos
7. Emergency Light - 10 Nos

மேற்கண்ட பொருட்களை அவசர அவசியம் கருதி வாங்கிட விலைப்பட்டியல் கோரப்பட்டதில் மெசர்ஸ். ஸ்டார் எண்டர்பிரைசர்ஸ், மதுரை நிறுவனத்தின் விலைப்பட்டியல் குறைவாக பெறப்பட்டது. அதன்படி மேற்கண்ட பொருட்களை மெசர்ஸ். ஸ்டார் எண்டர்பிரைசர்ஸ், மதுரை நிறுவனத்தில் வாங்கிக் கொள்ளவும், இதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.54,634/- ஆகும்.

அலுவலக குறிப்பு: இயற்கை இடர்பாடுகள் பணியின் முக்கியத்துவம் கருதி பொருட்கள் வாங்கியதையும், இதற்கான செலவினத்தினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **926, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி , கவி தியாராசர் சாலையில் வாரச்சந்தையின் பின்புறம் உள்ள நகராட்சியி இடத்தில் ரூ. 65.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன இறைச்சி கூடம் அமைத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 4168/2009/ப்பி3 நாள். 20.02.2009 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. இந்த இடத்தில் நவீன இறைச்சி கூடம் அமைத்திட கூடாது என தெரிவித்து கொடைக்கான்ல் யுனைட்டெட் சிட்டிசன் கவுன்சில் ஆப் கொடைக்கானல் மற்றும் வர்த்தக சஙகத்தினரால், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) No. 4450/2010 & WP(MD) No. 1 of 2009 ல் வழஙகு தொடரப்பட்டு 7.1.2011 ம் தேதிய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவில் பணியினை நிறுத்திடவும், சம்மந்தப்பட்ட துறைகளின் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும் உத்திரவிடப்பட்டது. பணி லிண்டல் வரை முடிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்ததாரருக்கு பகுதி பட்டியல் தொகை ரூ. 15.96 இலட்சம் விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து பணி மேற்கொள்வது நிறுத்தப்பட்டது.

மேலும், தலைவர், மாசுகட்டுப்பாட்டு வாரியம், சென்னை அவர்களின் 13.11.2013 ம் தேதிய கடிதம் எண். TNPCB/SWM/11549/2013 ல் கவி தியாகராசர் சாலையில் நவீன இறைச்சி கூடம் அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு ( Consent to Establish) மாற்று இடம் தேர்வு செய்திட தெரிவிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு WP(MD) No.12968/2017-ல் திரு ஆறுமுகம் என்பவரால் பழைய தினசரி மார்க்கெட் பகுதியில் ஆடுகள் வெட்டப்படுவதை நிறுத்திடவும், அதற்கு பதிலாக கவி தியாகராசர் சாலை அல்லது நகரின் ஒதுக்குபுறத்தில் இறைச்சி கூடம் அமைத்திட கோரி வழக்கு தொடர்ந்திருந்தார். இவ்வழக்கின் 3.8.2017 ம் தேதிய உத்தரவில் 6 மாத காலத்திற்குள் மாற்று இடம் தேர்வு நவீன இறைச்சி கூடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி ஆணையருக்கு உத்திரவிடப்பட்டது. மேலும் 17.9.2018 ம் தேதிய சென்னை உயர்நீதிமன்ற உத்திரவில் 9 மாத காலத்திற்கு காலம் நீட்டித்தும், மேலும் கால அவகாசம் தர இயலாது எனவும் உத்திரவு வழஙகப்பட்டது.

அதன்படி நகர்மன்றத் தீர்மானம் எண். 481 நாள்.05.10.2018–ல் கொடைக்கானல் நகரம், வார்டு டி, பிளாக் 3, நகரளவு எண். 40, அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் நவீன இறைச்சி கூடம் அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 15140/2019/இ1 நாள். 8.11.2019 ல் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி நாள். 25.02.2020ல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி 8.7.2020 ல் ஒப்பந்தததாரருக்கு பணி உத்திரவு வழஙகப்பட்டது.

பணி துவக்கப்படாத நிலையில், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆட்சேபணை செய்ததை தொடர்ந்து பணி நிறுத்தப்பட்டது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 18501/2020/பி3 நாள். 12.10.2020 கடிதத்தில் மாற்று இடம் தேர்வு செய்திட சிறப்பு குழு அமைத்து உத்திரவிடப்பட்டது. இந்த சிறப்பு குழுவினால் 23.10.2020ம் தேதிய இறுதி அறிக்கையில் **செண்பகனூர் கொய்யாப்பாறை பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வார்டு–டி, பிளாக் 24, நகரளவு எண். 96–ல்** உள்ள இடத்தில் நவீன இறைச்சி கூடம் அமைப்பதற்கு பரிந்துரை செய்துள்ளது.

எனவே, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவில் 9 மாத காலத்திற்குள் நவீன இறைச்சி கூடம் அமைக்கப்படவேண்டும் என்றும் மேற்கொண்டு காலநீட்டிப்பு செய்ய இயலாது எனவும் உத்திரவிடப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தவிர்க்கும்பொருட்டு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட சிறப்பு குழு பரிந்துரை செய்துள்ள மாற்று இடமான **செண்பகனூர் கொய்யாப்பாறை பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வார்டு–டி, பிளாக் 24, நகரளவு எண். 96–**ல் ஏற்கனவே இறைச்சி கூடம் அமைத்திட வழஙகப்பட்ட 8.7.2020 ம் தேதிய பணி உத்தரவு மற்றும் ஒப்பந்த விலை விகிதத்திலேயே நவீன இறைச்சி கூடம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கலாம்.

2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு குழு பரிந்துரை செய்துள்ள **செண்பகனூர் கொய்யாப்பாறை பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான வார்டு–டி, பிளாக் 24, நகரளவு எண். 96** ல் பணி மேற்கொள்ளவும், உரிய பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **927, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) மூலதன மானிய நிதி 2018-2019 ன் கீழ் கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மண் அணையினை பலப்படுத்தி உயரப்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாநில அளவிலான நாளிதழில் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மண் அணையினை பலப்படுத்தி உயர்த்தி கட்டுதல் | Eyedea brand solutions, Chennai. | 1992 dt 23.10.2020 | **2,84,288/–** |

இச்செலவினத்தினை குடிநீர் கணக்கு நிதியின் மூலம் வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். (கோப்பு .ந.க.எண். 3985/2015/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **928, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடஙகளில் உள்ள ஜெனரேட்டர் இயந்திரஙகளை சர்வீஸ் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. நகராட்சி அலுவலகம் 30 KVA
2. பேருந்து நிலையம் 50 KVA
3. அம்மா உணவகம் 15 KVA
4. சுஙக சாவடி 15 KVA

தற்போது வடகிழக்கு பருவமழை, புரவி புயல் காரணமாக அடிக்கடி மின் இணைப்பு துண்டிக்கப்படுவதினால் மேற்கண்ட ஜெனரேட்டர்களை சர்வீஸ் செய்து பயன்படுத்திட மதிப்பீடு ரூ. 85,750/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட ஜெனரேட்டர்களின் சர்வீஸ் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **929, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் காணொலி காட்சி ஆய்வுக் கூட்டம் நாள்.09.09.2020 மற்றும் நேர்முக கடிதம் எண்.2521/2020/பி1, நாள்.09.09.2020ம் தேதிய ஆய்வுக் கூட்டம் புரட்சித் தலைவி அம்மா ஒருங்கிணைந்த விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட 24 வார்டுகளிலும் வசிக்கும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளின் குடும்பங்களின் விபரங்களை களப்பணியாளர்கள் மூலம் எடுக்கப்பட்ட படிவங்களை கணினி மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளதால் விலைப்புள்ளி கோரியதில் மூன்ற விலைப்புள்ளிகள் வரப்பட்டள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி பெறப்பட்டவர்களின் விபரம் (ம) விலாசம் | கணினியில் பதிவேற்றம் செய்ய ஒரு படிவத்திற்கான விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | D J computer & services,<br>St.Anne's Complex, Moonjikkal, Kodaikanal.<br>Office No.9786369490. | ஒரு படிவத்திற்கு ரூ.15/– மட்டும். |
| 2. | Royal Computers & Technologies,<br>K.Immanuvel, Shop No.5, Annasalai, Kodaikanal. | ஒரு படிவத்திற்கு ரூ.18/– மட்டும். |
| 3. | A.M.A Digital Studio,<br>Perumalmalai, Kodaikanal. Cell No.8608255108. | ஒரு படிவத்திற்கு ரூ.20/– மட்டும். |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள D J computer & services, Moonjikkal என்பவரின் விலைப்புள்ளி தொகை ரூ.15/– மட்டும் (கணினியில் பதிவேற்றம் செய்ய ஒரு படிவத்திற்கான தொகை) ஏற்று அன்னாருக்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் மேற்கண்ட தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் உத்தேச செலவினம் தொகை ரூ.65,000/– (ரூபாய் அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3859/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **930, நாள். 30.11.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.